www.Padasalai.Net www.CBSEtips.in

KALLAKURICHI DISTRICT

வகுப்பு : 12

தேர்வு எண்

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2022 -23

## தமிழ்

நேரம் : 3.00 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள் : 1. அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி – I

குறிப்பு : அ) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 14X1=14

ஆ) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்

அ) யாப்பருங்கலங்காரிகை ஆ) தண்டியலங்காரம் இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்

2. உயர்திணை என்மனார் மக்கட்சுட்டே
அஃறிணை என்மனார் அவற பிறவே – இந்நூற்பா இடம் பெற்றுள்ள இலக்கண நூல்

அ) நன்னூல் ஆ) அகத்தியம் இ) தொல்காப்பியம் ஈ) இலக்கண விளக்கம்

3. நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது

அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழை மேகங்கள் இ) மழைத்துளிகள் ஈ) நீர்நிலைகள்

4. சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்க காலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை -----

அ) அறவோர், துறவோர் ஆ) திருமணமும் – குடும்பமும்

இ) மன்றங்களும் அவைகளும் ஈ) நிதியமும் – சங்கமும்

5. கடலின் பெரியது

அ) உற்ற காலத்தில் செய்த உதவி ஆ) பயன் ஆராயாமல் ஒருவர் செய்த உதவி

இ) திணையளவு செய்த உதவி

6. சுரதா நடத்திய கவிதை இதழ்

அ) இலக்கியம் ஆ) காவியம் இ) ஊர்வலம் ஈ) விண்மீன்

7. 'காலை இளம் வெயில் நன்றாக மேய, தும்பறுத்துத் துள்ள வரும் புதுவெயில்' இக்கவிதையில் -----பயின்று வந்துள்ளது

அ) பயன்படிமம் ஆ) வினைபடிமம் இ) மெய்ப்படிமம் ஈ) உருப்படிமம்

8. 'உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்' – இத்தொடர் உணர்த்தும் பண்பு

அ) நேர்மறைப்பண்பு ஆ) எதிர்மறைப்பண்பு இ) முரண் பண்பு ஈ) இவை அனைத்தும்



CamScanner
Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

9. ஏழ் ஆண்டு இயற்றி ஓர் ஈராறு ஆண்டில் சூழ்கடல் மன்னற்குக் காட்டல் --- தொடர்களில் வெளிப்படுத்தும் செய்திகள்.

1. மாதவி ஏழு ஆண்டுகள் வரை நாட்டியம் பயின்றாள்
2. ஈராறு வயதில் அரங்கேற்றம் செய்ய விரும்பினாள்

அ) 1 சரி 2 தவறு ஆ) 1 தவறு 2 சரி இ) 1 தவறு 2 தவறு ஈ) 1 சரி 2 சரி

10. திண்ணியர் என்பதன் பொருள்

அ) அறிவுடையவர் ஆ) மனஉறுதியுடையவர் இ) தீக்காய்வார் ஈ) அறிவினார்

11. 'சாபவிமோசனம்' 'அகலிகை' கதைகளில் தொன்மங்களைப் பயன்படுத்தியவர்

அ) கு.அழகிரிசாமி ஆ) புதுமைப்பித்தன் இ) ஜெயமோகன் ஈ) எஸ்.இராமகிருஷ்ணன்

12. யானை புக்க புலம்போல – இவ்வுவமைக்குப் பொருத்தமான தொடர்

அ) தனக்குப் பயன்படும், பிறருக்குப் பயன்படாது ஆ) தனக்குப் பயன்படாது, பிறருக்கும் பயன்படாது

இ) பிறருக்குப் பயன்படும், தனக்குப் பயன்படாது ஈ) தனக்கும் பயன்படும் பிறருக்கும் பயன்படும்

13. பொருந்தாத ஒன்றைக் கண்டறிக.

அ) தனித்தமிழ்த் தந்தை – 1. மு. வரதராசனார்

ஆ) ஆராய்ச்சிப் பேரறிஞர் – 2. மயிலை வேங்கடசாமி

இ) தமிழ்த்தென்றல் – 3. திரு.வி.க

ஈ) மொழி ஞாயிறு – 4. தேவநேயப்பாவாணர்

14. கிறித்துவக் கம்பர் என்று அழைக்கப்படுவர்

அ) எச்.ஏ.கிருட்டிணனார் ஆ) ஜான்பன்யன் இ) ஜி.யு.போப் ஈ) க.கிருஷ்ணமூர்த்தி

## பகுதி – II

### பிரிவு–1

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3x2=6

15. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?
16. நிலையாமை குறித்து, சவரி உரைக்கும் கருத்து யாது?
17. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில், இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.
18. செவியறிவுறூஉ துறையை விளக்குக.

### பிரிவு–2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2x2=4

19. 'ஆளுக்கொரு மரம் வளர்ப்போம்' என்னும் முழக்கத்தொடர் வாயிலாக எவற்றை வலியுறுத்துவாய்?
20. அக்காலத்துக் கல்விமுறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் எவை?
21. 'தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்' நூல் பற்றிக் குறிப்பு வரைக.

### பிரிவு–3

எவையேனும் ஏழனுக்கு விடை தருக. 7x2=14

22. உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.

அ) உள்ளங்கை நெல்லிக்கனிபோல ஆ) கிணற்றுத்தவளை போல



CamScanner

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

23. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

தலை, தளை, தழை

24. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

ஆசிரியருக்கு கீழ்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றை தெரிந்துகொண்டு, அறியாமையினை அகற்றி பல நல்லனவற்றை கற்று கொடுக்கும்.

25. கலைச்சொல் எழுதுக.

அ) Animation ஆ) Newsreel

26. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.

அ) அன்னைக்கு அவனுக்குப் பணம் குடுத்து ஒதவியருக்கவேண்டியதான

ஆ) புள்ளைக்கு உடம்பு சரியில்லை மூணு நாளா சிரமப்படுது

27. கீழ்க்காணும் நான்கு சொற்களைக் கொண்டு தொடர் எழுதுக.

குழந்தை, நட, தளிர்நடை, விழு

28. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.

அ) செய்த ஆ) கண்டான்

29. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.

அ) அருங்கானம் ஆ) தலைக்கோல்

30. தொன்மம் விளக்கம் தருக.

## பகுதி – III

### பிரிவு–1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. 2x4=8

31. வாடைக்காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?

32. 'மூன்றான காலம் போல் ஒன்று' –எவை? ஏன்? விளக்குக.

33. ஏதேனும் இரண்டு மெய்ப்பாடுகள் தோன்றுவதற்கான சூழ்நிலையைக் கற்பனையாகப் படைக்க.

34. 'ஈசன்மகன் நின்றனர் ஒர் ஏழையென ஓர்மின்' –இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

### பிரிவு–2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2x4=8

35. சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் – விளக்குக.

36. தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்துக்குச் செய்யும் உதவிகள் யாவை?

37. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில், இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.

38. மயிலை சீனி. வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் தருக.

### பிரிவு–3

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக. 3x4=12

39. பொருள் வேற்றுமையணியைச் சான்றுடன் விளக்குக. (அல்லது)

அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார் – இக்குறப்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

40. பின்வரும் பாடலைப் படித்து பொருளுணர்ந்து மையக்கருத்தினை எழுதி, ஏற்புடைய நயங்கள் மூன்றினை எழுதுக.

பூமிச்சருகாம் பாலையை
முத்துபூத்த கடல்களாக்குவேன்
புயலைக் கூறுபடுத்தியே – கோடிப்
புதிய தென்றலாக்குவேன்
இரவில் விண்மீன் காசினை – செலுத்தி
இரவலரோடு பேசுவேன்!
இரவெரிக்கும் பரிதியை – ஏழை
விறகெரிக்க வீசுவேன்.

*–நா.காமராசன்*



CamScanner
Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

41. பழமொழியை வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்புப்படுத்தி எழுதுக.

கூடிவாழ்ந்தால் கோடி நன்மை (அல்லது) அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.

42. நெய்தல் திணை (அல்லது) பரிசில் துறையைச் சான்றுடன் விளக்குக.

43. தமிழாக்கம் தருக.

1. Learning is a treasure that will folloiw its owner everywhere.
2. A new language is a new life.
3. Knowledge of Language is the doorway to wisdom.
4. The limits of my Language are the limits of my world.

43. காது கேளாதவர்களுக்கான மாற்றுவினா. பின்வரும் பத்தியைப் படித்துணர்ந்து வினாக்களுக்கு ஏற்ற விடை தருக.

மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை. மொழியே மக்கள் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது. பெற்ற தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல், அவள் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி, குழந்தையின் பேச்சைக் கேட்பதே ஆகும். குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது மொழி வளர்ச்சியே ஆகும். மனம் என்பது பெரும்பாலும் மொழியால் வளர்ந்து அமைந்தது. மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே பேசுவோரின் மொழியும் வளர்ச்சிப் பெற்று நிற்கும். மக்கள் அனைவரும் மொழிக்கு ஆசிரியராகவும் உள்ளனர். மாணவராகவும் உள்ளனர். மொழியை வளர்ப்பவரும் மக்களே, மொழியால் வளர்பவரும் மக்களே.

வினாக்கள்:

1. மொழி என்பது யாது?
2. பெற்ற தாயின் முதல் வேட்கை யாது?
3. மொழி வளர்ச்சி எதனோடு தொடர்புடையது?

## பகுதி – IV

பின்வரும் வினாக்களுக்கு இருபக்கங்களுக்கு மிகாமல் விடை தருக. 3x6=18

44. அ) சினத்தைக் காத்தல் வாழ்வை மேன்மைப்படுத்தும் – இக்கூற்றை முப்பால் வழி விரித்துரைக்க.

(அல்லது)

ஆ) சென்னையில் உள்ள மயிலாப்பூர், கந்த கோட்டப் பகுதிகள் செய்யுளில் எவ்விதம் காட்சிப்படுத்தப்படுகின்றன?

45. அ) கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.

(அல்லது)

ஆ) நிருவாக மேலாண்மை குறித்து வெ. இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

46. அ) பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்க.

(அல்லது)

ஆ) மகாநடிகரைக் கண்ட பாலசந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக.

அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக. 4+2=6

47. அ) "அறிவும் புகழும்......." எனத் தொடங்கும் புறநானூறு பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) '....... நோய்' – என முடியும் குறட்பாவை அடிபிறழாமல் எழுதுக.



CamScanner

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com